**துணை ஆணையர்(மாவ), அம்பத்தூர் சரகம், அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை செல்வி. ரு. தானுப்ரியா,**
**இடம் ஒருங்கிணைந்த வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை வளாகம்,**
**7வது தளம், அண்ணா சாலை, நந்தனம்,சென்னை-35.**

---

ந.க. 154/2024/அ1

நாள்- 31.01.2024

பொருள் : பொதுப்பணிகள் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் - தொகுதி-II-அ நேர்காணல் அல்லாத பதவி - நேரடி நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - வணிகவரித்துறை - காஞ்சிபுரம் கோட்டம் - துணை ஆணையர்(மாவ), அம்பத்தூர் சரகம் அலுவலகம் - திரு.ம.முத்தரசு, உதவியாளர் - பணிவரன்முறை செய்து ஆணையிடல்- தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.6024/PSD-D2/2018, நாள்.02.04.2019.
2. இணை ஆணையர் (மாவ), சென்னை (தெற்கு) கோட்டம் தற்போதைய காஞ்சிபுரம் கோட்டம் ,அவர்களின் செ.மு.நக.5394/2019/அ2, நாள். 24.06.2019.
3. தமிழ்நாடு மாநில அளவிலான ஆய்வுக்குழு- II ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி நலன் துறை, தலைமை செயலகம் அவர்களின் செயல்முறை ஆணை எண் 982/ CV -2(2)/2020-10, நாள்- 18.12.2023.

''''''''''''''''''''''''''

ஆணை :

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால், தொகுதி-II-அ நேர்காணல் அல்லாத பதவி 2017-18 மூலம் உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் இணை ஆணையர் (மாவ), காஞ்சிபுரம் கோட்டம் அவர்களின் ஆணையின் வாயிலாக உதவி ஆணையர்(மாவ) கோயம்பேடு வரிவிதிப்பு வட்டத்தில் பணியமர்த்தப்பட்ட திரு.ம.முத்தரசு, என்பவருக்கு பார்வை 3ல் காணும் தமிழ்நாடு மாநில அளவிலான ஆய்வுக்குழு- II ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி நலன் துறை அவர்களின் செயல்முறையின்படி தனியாளரின் சாதி சான்றிதழ் மெய்தன்மை ஆணை பெறப்பட்டதை தொடர்ந்து அவர் பணியில் சேர்ந்த நாளான 28.06.2019 முற்பகல் முதல் உதவியாளர் பணி நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இந்த பணிவரன்முறை ஆணையானது தொகுதி-II நேர்காணல் அல்லாத பதவி தேர்வு 2017-18 இப்பதவிகள் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர் நீதி மன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள நீதிப்பேராணை மனுக்களின் மீதான தீர்ப்பினைப் பொறுத்து மாறுதலுக்குட்பட்டது.

ஒம்/- (ரு.தானுப்ரியா
துணை ஆணையர் (மாவ),
அம்பத்தூர் சரகம்.

பெறுநர் .
திரு.ம.முத்தரசு, உதவியாளர்,
துணை ஆணையர்(மாவ) அலுவலகம், அம்பத்தூர் சரகம்

நகல் - இணை ஆணையர் (வவ), காஞ்சிபுரம் கோட்டம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

//உண்மை நகல்//

1/2/24
மாநில வரி அலுவலர்

01/2/24